DINAMALAR

23 FEB 2022

PAGE 4

# புதுச்சேரி பல்கலைக் கழக ஊழியர்களுக்கு கிரிக்கெட் போட்டி

**புதுச்சேரி, பிப். 23–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு விழா நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழக ஊழியர்களுக்கு டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டி நடந்தது.

போட்டியை பல்கலைக் கழக இணை டீன் ரியாசுதீன் துவக்கி வைத்தார். இயக்குனர் (பொறுப்பு) வசந்தி வரவேற்றார்.

போட்டியில் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் தனித்தனி அணியாக பங்கேற்றனர்.

விளையாட்டு துறை சார்பில், போட்டிகள் லீக் மற்றும் நாக் அவுட் முறையில் கடந்த நான்கு நாட்களாக நடந்தது.

பாதுகாப்பு, நிர்வாகம், மின் ஊழியர்கள் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.

வெற்றி பெற்ற மூன்று அணிகளுக்கு டீன் கிளமெண்ட் சகாயராஜ் சான்றிதழ், பதக்கங்களை வழங்கினார்.

பேராசிரியர் வினோத் குமார் நன்றி கூறினார்.



புதுச்சேரி பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு பரிசு வழங்கப்பட்டது.